தினமணி

**ஆறுமுகனேரி வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் விதை நெல் விநியோகம்**

First Published : 04 Nov 2011 02:30:25 PM IST

ஆறுமுகனேரி,நவ.3: ஆறுமுகனேரி வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு விதை நெல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஆறுமுகனேரி வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் இந்த ஆண்டு பிசான பருவத்துக்கு தேவைப்படும் வெள்ளை சம்பா என்ற அம்பை 16 ரக நெல் விதை தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 30 கிலோ எடையுள்ள விதை நெல் ரூ. 690. சிறு குறு விவசாயிகளுக்கு வசதியாக 30 கிலோ பையில் விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான விவசாயிகள் அலுவலகத்தில் வந்து பெறலாம் என வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வேளாண் கணக்கெடுப்பு பண்ருட்டியில் பயிற்சி வகுப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2011,23:56 IST

பண்ருட்டி : பண்ருட்டி தாலுகா அலுவலகத்தில் வேளாண் கணக்கெடுப்பு குறித்த பயிற்சி வகுப்பு தாசில்தார் தலைமையில் நடந்தது. தமிழ்நாடு வேளாண் கணக்கெடுப்பு கடந்த 1970-1971ம் ஆண்டு முதல் துவங்கி தற்போது 2010-11 அடிப்படையாக கொண்டு முதற்கட்டமாக கடந்த 2010 ஜூலை 1 முதல் 2011 ஜூன் 30 வரையிலான 9வது வேளாண் கணக்கெடுப்பு துவங்கியது. அதன்படி பண்ருட்டி தாலுகா அளவில் வேளாண் கணக்கெடுப்பு பணி பயிற்சி வகுப்பு நேற்று நடந்தது. பயிற்சியை தாசில்தார் அனந்தராம் துவக்கி வைத்தார். புள்ளி இயல்துறை உதவி இயக்குனர் கோதண்டபாணி பயிற்சி வகுப்பினை நடத்தினார். பயிற்சியை வட்டார புள்ளியியல் ஆய்வாளர் அழகப்பன் ஒருங்கிணைத்தார். இதில் மண்டல துணை தாசில்தார்கள் சரஸ்வதி,

குமாரசாமி, வருவாய் ஆய்வாளர்கள் பூபாலசந்திரன், ஆனந்தி, சித்ரா, புள்ளியியல் ஆய்வாளர் பழனியம்மாள், இளையராணி, வி.ஏ.ஓ.,க் கள் பங்கேற்றனர்.

**வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 05,2011,23:56 IST

சிதம்பரம் : மழைக்காலம் துவங்கிவிட்டதால் வேளாண் விளை பொருட்கள் தரம் குறையாமல் பாதுகாக்க விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார். சிதம்பரம் வேளாண் அலுவலர் சித்ரா விடுத்துள்ள செய்திக்குறிப்பு: பருவமழை துவங்கிவிட்டதால் சிதம்பரம் கோட்டத்தில் குறுவை மற்றும் பின்பட்ட சாகுபடி செய்து சேமித்து வைத்திருக்கும் விளை பொருட்கள் தரம் குறையாமல் இருக்க கோணி பைகளில் விளை பொருட்களை நிரப்பி தரையில் மரச்சட்டங்கள் மற்றும் காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும். நெல் மூட்டைகளை சுவரிலிருந்து ஒரு அடி இடைவெளி விட்டு அடுக்கி வைத்தால் சுவற்றின் ஈரப்பதம் தாக்காது. பொருட்கள் கலப்பினம், உடைந்தவை, முதிர்ச்சி அடையாதவை, பூச்சி தாக்குதல் மற்றும் நோய் பாதிப்பால்லாத விதைகளை தரம் பிரித்து சேமித்து வைப்பதால் நீண்ட காலம் தரம் குறையாமல் இருப்பதோடு சேதாரம் தவிர்க்கலாம்.

*தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்*

## ***கடந்த பருவத்தில் உலக காபி ஏற்றுமதி 9 சதவீதம் வளர்ச்சி***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*கடந்த 2010–11 காபி பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) சர்வதேச அளவில் காபி ஏற்றுமதி 9 சதவீதம் வளர்ச்சி கண்டு 10.31 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபி கொட்டைகளைக் கொண்டதாகும். முந்தைய 2009–10 பருவத்தில் உலக காபி ஏற்றுமதி 9.43 கோடி மூட்டைகளாக இருந்தது.*

*உலக அளவில், செப்டம்பர் மாதத்தில் காபி ஏற்றுமதி 15 சதவீதம் குறைந்து 70.40 லட்சம் மூட்டைகளாக சரிவடைந்துள்ளது. இது, 2010 செப்டம்பரில் 82.40 லட்சம் மூட்டைகளாக இருந்தது.*

*கடந்த பருவத்தில் 6.66 கோடி மூட்டைகள் அராபிகா காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தில் 6.15 கோடி மூட்டைகளாக இருந்தது. ரோபஸ்டா காபி ஏற்றுமதி 3.27 கோடி மூட்டைகளிலிருந்து 3.66 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. சர்வதேச காபி அமைப்பு இந்த புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. உலக அளவில் காபி பயன்பாடு அதிகரித்து வருவதே ஏற்றுமதி உயர்ந்ததற்கு முக்கிய காரணம் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.*

*உலக அளவில் காபி உற்பத்தியில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. நம்நாட்டில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த காபியில் சுமார் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது. இதில் பெரும் பகுதி ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் செல்கிறது.*

## வடகிழக்கு பருவமழை தீவிரம் சோலையாறு அணை நிரம்பியது

*கோவை,நவ.5–*

*வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதை தொடர்ந்து அணைகளில் நீர் மட்டம் கிடு கிடுவென்று உயர்ந்து வருகிறது. இதில் சோலையாறு அணை நிரம்பி வழிகிறது.*

*மழை அளவு*

*கோவை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த 10 நாட்களாக பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. இதற்கிடையில் கோவையில் நேற்று காலை வழக்கத்துக்கு மாறாக வெயில் அடிக்க தொடங்கியது. சில*

நேரங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு, குளிர்ந்த காற்று வீசியது. இருந்தாலும் காலை முதல் மதியம் வரை மழை பெய்ய வில்லை. ஆனால் மாலையில் மழை பெய்யத்தொடங்கியது. நேற்று முன்தினம் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) விபரம் வருமாறு:–

அன்னூர்–9, பீளமேடு விமான நிலையம்–17, மேட்டுப்பாளையம்–10.10, கோவை விவசாய கல்லூரி–10, சூலூர்–11.20, பொள்ளாச்சி–10, சின்னக்கல்லார்–19, சின்கோனா–6, வால்பாறை பி.ஏ.பி.–7, வால்பாறை தாலுகா–8, கோவை தெற்கு–17.40, ஆகும். சராசரி மழை அளவு–11.14 ஆகும்.

சிறுவாணி அணை

இந்த மழை காரணமாக கோவை மாவட்டத்தில் உள்ள குளங்கள், குடிநீர் ஆதார அணைகள் பயன்பெற்று வருகின்றன. நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி, பில்லூர் அணைகளிலும் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

சிறுவாணி அணையின் மொத்த கொள்ளளவு 50 அடி. கடந்த தென்மேற்கு பருவமழையின் போது இந்த அணை நிரம்பி வழிந்தது. ஆனால் அணை நிரம்பிய சில நாட்களிலேயே அதன் நீர்மட்டம் குறையத் தொடங்கியது.

சோலையாறு அணை நிரம்பியது

இந்த நிலையில் கடந்த 10 நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் குறைந்த நிலையில் காணப்பட்ட சிறுவாணி அணையின் நீர்மட்டம் கிடு, கிடுவென உயர்ந்து நிரம்பும் நிலைக்கு வந்துள்ளது. தற்போது அணையின் நீர்மட்டம் 49 அடி ஆகும். இது தவிர அணைகளின் நீர்மட்டம் விவரம்(அடைபுப்பு குறிக்குள் மொத்த கொள்ளளவு) வருமாறு:–

சோலையாறு அணை (160 அடி)– 160.74, பரம்பிக்குளம்(72 அடி)– 70.44, தூணக்கடவு (22 அடி) 20.66, ஆழியாறு(120 அடி) 119.80, திருமூர்த்தி (60அடி)–42.79, அமராவதி(90)–65, ஆகும். சோலையாறு அணை நிரம்பி வழிவதால் வினாடிக்கு 900 கன அடி தண்ணீர் தினசரி வெளியேற்றப்படுகிறது.

## அரபிக்கடலில் புதிதாக காற்றழுத்த தாழ்வு பகுதி ‘தமிழ்நாட்டில் மழை நீடிக்கும்’ என்று வானிலை ஆய்வு மையம் தகவல்

*சென்னை, நவ.5–*

*அரபிக்கடலில் புதிதாக காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி இருப்பதால் தமிழ்நாட்டில் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.*

*மழை நீடிக்கும்*

*வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் தமிழகம் முழுவதும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வங்கக்கடலில் உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து அதே இடத்தில் நிலைகொண்டு இருப்பதால் பல இடங்களில் மழையும் ஒருசில இடங்களில் கனமழையும் பெய்து வருகிறது.*

*இந்தநிலையில், அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி இருப்பதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது. இதுகுறித்து சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–*

*அரவக்குறிச்சியில் 13 செ.மீ. மழை*

*வங்கக்கடலில் வட தமிழகம், தெற்கு ஆந்திராவை ஒட்டியுள்ள பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து அதே நீடிப்பதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாநிலத்தில் அனேக இடங்களில் கனமழை பெய்துள்ளது.*


*அதிகபட்ச அளவாக அரவக்குறிச்சியில் 13 செ.மீ, மழை பதிவாகி உள்ளது. அதற்கு அடுத்தபடியாக, தொழுதூரில் 12 செ.மீ., மருங்காபுரி, கீழச்சேருவையில் தலா 11 செ.மீ. கொத்தவாசேரி, குப்பாநத்தம் ஆகிய இடங்களில் தலா 10 செ.மீ. விருத்தாசலம், பட்டுக்கோட்டையில் தலா 9 செ.மீ. மழை பெய்துள்ளது. சிதம்பரம், கந்தர்வகோட்டையில் தலா 8 செ.மீ. செங்குன்றம், தாமரைப்பாக்கம், ராமேசுவரம், மேட்டூர் அணை, கடலூர், வேடசந்தூர் ஆகிய இடங்களில் தலா 7 செ.மீ. தாம்பரம், மரக்காணம், பாம்பன், தேவகோட்டை மற்றும் மானாமதுரையில் தலா 6 செ.மீ. மழை பதிவாகி இருக்கிறது.*

*சென்னை, கிண்டி அண்ணா பல்கலைக்கழகம், போலீஸ் டி.ஜி.பி. அலுவலகம், திருவள்ளூர், சோழவரம், அதிராம்பட்டிணம், மதுக்கூர், நன்னிலம், பெருந்துறை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ. மழை பெய்துள்ளது.*

அரபிக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி

இந்த நிலையில், அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி இருக்கிறது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வங்கக்கடல் பகுதியில் இருந்து காற்றை உள்நோக்கி இழுக்கும். இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று) மழை பெய்யும். ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொருத்தவரையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அவ்வப்போது விட்டு விட்டு மழை பெய்யும். இவ்வாறு ரமணன் கூறினார்.

## நடப்பு பருவத்தில் இதுவரை நெல் கொள்முதல் 90.40 லட்சம் டன்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்திய உணவுக் கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசு முகமை அமைப்புகள், நடப்பு நெல் சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இதுவரை 90 லட்சத்து 40 ஆயிரத்து 356 டன் நெல் கொள்முதல் செய்துள்ளன.

தமிழ்நாட்டில்...

*பஞ்சாப் மாநிலத்தில் அதிகபட்சமாக 69.56 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அரியானா மாநிலத்தில் 18.09 லட்சம் டன்னும், தமிழ்நாட்டில் 1.76 லட்சம் டன்னும் வாங்கப்பட்டுள்ளன.*

*முந்தைய 2010–11 பருவத்தில் இந்த அமைப்புகளின் நெல் கொள்முதல் மொத்தம் 3.40 கோடி டன்னாக இருந்தது. இதில் 96.10 லட்சம் டன் நெல்லை வாங்கி ஆந்திர மாநிலம் முதலிடத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தபடியாக பஞ்சாப் மாநிலத்தில் 86.30 லட்சம் டன்னும், சத்தீஸ்கரில் 37.40 லட்சம் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டிருந்தன. உத்தரபிரதேசத்தில் 25.50 லட்சம் டன்னும், ஒரிசாவில் 24.60 லட்சம் டன்னும், அரியானாவில் 16.80 லட்சம் டன்னும் வாங்கப்பட்டிருந்தன.*

*கடந்த 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) அரிசி உற்பத்தி 9.53 கோடி டன்னுக்கம் சற்று அதிகமான அளவில் இருந்தது. நடப்பு 2011–12 பருவத்தில் 10.20 கோடி டன் அரிசி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

*சர்வதேச அளவில் நெல் உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் இருந்து வருகின்றன. நம் நாட்டில் கரீஃப் பருவத்தில் நெல் விதைப்பு பணிகள் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அறுவடை செப்டம்பர்–அக்டோபர் மாத காலத்தில் நடைபெறுகிறது. அரிசி உற்பத்தியில் ஆந்திர மாநிலம் முதலிடத்தில் உள்ளது.*

*கரீப் – ரபி*

*இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் (ஜூன்–அக்டோபர்) பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. ரபி பருவத்தின் (அக்டோபர்–மார்ச்) பங்களிப்பு 15 சதவீத அளவிற்கே உள்ளது. இப்பருவத்தில் வட மாநிலங்களில் கோதுமை சாகுபடியே மும்முரமாக நடைபெறுகிறது.*